# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1415/18 - 2005 ඔක්තෝබර් 19 වැනි බදාදා - 2005.10.19

*1415/18 ஆம் இலக்கம் – 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ01/ 2005*

**2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம்**

*2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 204ஆம் பிரிவின் கீழ் வர்த்தக, வாணிப, பாவனையாளர் அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே,
வர்த்தக, வாணிப, பாவனையாளர்
அலுவல்கள் அமைச்சர்.

வர்த்தக, வாணிப, பாவனையாளர்
அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு.
2005, ஒற்றோபர் 11.

1. இவ்வொழுங்குவிதிகள் 2005ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, புலமைச்சொத்து ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன், 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**பதிப்புரிமையும் தொடர்புபட்ட உரிமைகளும்**

2. (1) பதிப்புரிமைச் சொத்துக்காரர், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய சொந்தக்காரரினாலும் அதிகார வளிப்பைப் பெறுகின்ற ஆளினாலும் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறாக (இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்), புலமைச் சொத்துச் சட்டத்தின் 9ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட செயல்களுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிப்பதற்கான கொடுப்பனவொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஒலிப்பதிவொன்றின் மற்றும் ஒலிபரப்பு ஒழுங்கமைப்பொன்றின் அரங்காடுநர் அல்லது தயாரிப்பாளர் ஒவ்வொருவரும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, முறையே சட்டத்தின் 17, 18 மற்றும் 20 ஆகிய பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட செயல்களுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிப்பதற்காக, ஒலிப்பதிவின் அல்லது ஒலிபரப்பு ஒழுங்கமைப்பின் அத்தகைய அரங்காடுநரினாலும் அல்லது தயாரிப்பாளரினாலும் அதிகாரவளிப்பைப் பெறுகின்ற ஆளினாலும் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறாகக் கொடுப்பனவொன்றைப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) (1) சட்டத்தின் 22ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் (இதனகத்துப் பின்னர் "விண்ணப்பகாரர்" எனக் குறிப்பீடு செய்கின்றவரும்) அவரது உரிமைகளுள் எவையும் மீறப்படுகின்றமையினால் இன்னலுறுகின்றவருமான ஆளொருவரினாலான விண்ணப்பமொவ்வொன்றும், தீர்த்துவைக்கப்படவுள்ள பிணக்கொன்று உள்ளமை பற்றி விண்ணப்பகாரர் எத்தேதியன்று அறியவருகின்றாரோ அத்தேதியிலிருந்து ஒரு மாத காலப் பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விண்ணப்பம் பொருளளவில் இதற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சீ 01 என்னும் படிவத்திலிருத்தலும் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் விண்ணப்பகாரரினால் அல்லது உரிய முறையில் நியமிக்கப்பட்ட அவரது முகவரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பமானது, தீர்த்துவைக்கப்படவுள்ள பிணக்குப் பற்றிய தெளிவானதும் சுருக்கமானதுமான கூற்றொன்றையும், சத்தியக் கடதாசி என்ற வகையாக விண்ணப்பகாரரினால் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகளை நிலைநாட்டுவதற்கான சான்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பமானது இரு பிரதிகளில் செய்யப்படுதல் வேண்டும்.

(4) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மீது, பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பத்தின் உள்ளீடுகள் மீதான அவரது அவதானிப்புகளுக்கான வேண்டுகோளுடன் (இதனகத்துப்பின்னர் "சார்த்தப்பட்ட மீறுநர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமைகளை மீறியவரெனச் சார்த்தப்பட்ட ஆளுக்கு அத்தகைய விண்ணப்பத்தின் பிரதியொன்றைச் சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

(5) சார்த்தப்பட்ட மீறுநர், பணிப்பாளர் தலைமையதிபதியின் வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஒரு காலப்பகுதியினுள் அவரது அவதானிப்புகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) சார்த்தப்பட்ட மீறுநர், விண்ணப்பகாரரினாற் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகளை எதிர்ப்பதற்கு, ஒரு சத்தியக் கடதாசி என்ற வகையான ஏதேனும் சான்றுடன் சேர்த்து அவரது அவதானிப்புகளை அளிக்கலாமென்பதுடன், இயைபான பிணக்குத் தொடர்பாக அவரது நிலைமையையும் நிலைநாட்டலாம்.

(7) அவதானிப்புகளைப் பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, இயன்றளவுவரை விரைவாக, கேட்புக்கானவொரு திகதியை நிர்ணயித்தலும் அதற்கிணங்கத் திறத்தவர்களுக்கு அறிவித்தலும் வேண்டும்.

(8) கேட்பிலான சான்று, பணிப்பாளர் தலைமையதிபதியினால் வேறுவகையாகப் பணிக்கப்பட்டாலொழிய, ஒரு சத்தியக்கடதாசி என்ற வடிவத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சான்று சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், திறத்தவர்கள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் கொடுக்கப்பட்ட ஒரு திகதியன்று, ஒரே நேரத்தில், எழுத்திலான சமர்ப்பணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றைக் கோப்பிலிடுதலும் வேண்டும்.

(9) பணிப்பாளர் தலைமையதிபதி, கேட்பில் திறத்தவர்களினால் அளிக்கப்பட்ட சான்றையும் சமர்ப்பணங்களையும் கவனத்துட்கொண்டு,பிணக்குத் தொடர்பிலான முடிவொன்றைச் செய்தலும், இயன்றளவுவரை விரைவாகத் திறத்தவர்களுக்கு அவரது முடிவை அறிவித்தலும் வேண்டும்.

(10) சார்த்தப்பட்ட மீறுநர் (6) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்றவிடத்து அல்லது பணிக்கப்பட்டவாறு பணிப்பாளர் தலைமையதிபதியின் முன்னர் தோன்றுவதற்குத் தவறுமிடத்து அல்லது அசட்டையாகவிருக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி கட்டளையை மறுதிறத்தவரில்லாமல் ஆக்கலாம்.

**நாட்டுப்பாடல்**

4. (1) சட்டத்தின் 24ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி பணிப்பாளர் தலைமையதிபதியாதல் வேண்டும்.

(2) சட்டத்தின் 24ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அதிகாரவளிப்புக்கான ஏதேனும் வேண்டுகோள், பொருளளவில் இதற்கான இரண்டாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் இதற்கான முதலாம் அட்டவணையின் சீ 02 என்னும் படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பகாரரினால் அல்லது உரிய முறையில் நியமிக்கப்பட்ட அவரது முகவரால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி,அதிகாரவளிப்பின் வழங்குகை தோதானதெனத் திருப்திப்படுவதுடன், காலப்பகுதி, நோக்கம் மற்றும் மட்டுப்பாடுகள் எவையேனுமிருப்பின் அவையுட்பட, தோதானவையென அவர் கருதக்கூடியவாறான நிபந்தனைகளுக்கமைய அவ்வதிகாரவளிப்பை வழங்கலாம்.

(4) (அ) வியாபாரம், வர்த்தகம் மற்றும் பாவனையாளர் விவகாரங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், பணிப்பாளர் தலைமையதிபதியினதும் பண்பாட்டலுவல்கள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் கலந்தாலோசனையுடன் எந்தப் பண்பாட்டு அபிவிருத்திக்காக 24ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பணம் பயன்படுத்தப்படவுள்ளதோ அந்தப் பண்பாட்டு அபிவிருத்தியின் நோக்கங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

(ஆ) சட்டத்தின் 176ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பணிப்பாளர் தலைமையதிபதி, சட்டத்தின் 24ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின்கீழ் சேகரிக்கப்பட்ட பணத்துக்காகத் தனிவேறான கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும்.

**கூட்டுச் சங்கங்கள்**

5. (1) சட்டத்தின் 25ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட சங்கமொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம், பொருளளவில் இதற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சீ 03 என்னும் படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பகாரரினால் அல்லது உரிய முறையில் நியமிக்கப்பட்ட அவரது முகவரால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(2) விண்ணப்பகாரர், சங்கத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்துடன் சேர்த்து, சங்கத்தின் அமைப்புப் புறவிதியையும் அமைப்பக விதிகளையும் அல்லது அமைப்பையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளித்தல் வேண்டும்.

(3) சட்டத்தின் 25ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் சங்கத்தைப் பதிவுசெய்வதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி உரிமமொன்றுடன் சேர்த்து பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) உரிமமானது, பணிப்பாளர் தலைமையதிபதி அவசியமெனக் கருதுகின்றவாறாக, விண்ணப்பகாரரின் பெயர், முகவரி, பதிவிலக்கம், உரிமைகளின் இயைபான துறை/வகுப்பு, உயர்தொழில்சார் தகுதி என்பவவற்றையும் ஏனைய தகவலையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) குறிப்பிட்ட சங்கம், சம்பந்தப்பட்ட உரிமைகளின் சொந்தக்காரர்களினது நலன்களுக்குப் பங்கமானவொரு முறையில் முகாமை செய்யப்படுகின்றதென்ற பொருள்பட தகவலைத் தம்வசம் வைத்திருக்கும் பணிப்பாளர் தலைமையதிபதி, சங்கத்தின் முகாமைத்துவ அலுவலர்களை விசாரணையொன்றுக்காகச் சமுகமளிக்கும்படி தேவைப்படுத்துதல் வேண்டும். விசாரணையில் பங்குபற்றும்படி அத்தகைய சங்கத்தின் அலுவல்களில் அக்கறை கொண்டுள்ள எவரேனுமாளுக்கும் அவர் வேண்டுகோள் விடுக்கலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி சங்கம் தொடர்பிலான எல்லா ஆவணங்கள், கோப்புகள் மற்றும் தகவல்களை பரிசோதனை செய்யலாம்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி, சங்கமானது சம்பந்தப்பட்ட உரிமைகளின் சொந்தக்காரரின் நலன்களுக்குப் பங்கமான முறையொன்றில் முகாமை செய்யப்படுகின்றது எனத் திருப்திப்பட்டுக்கொண்டு, சங்கத்தின் பதிவையும் அலுவல்களை செய்வதற்கான அனுமதியையும் இரத்துச் செய்தல் வேண்டும்.

(8) ஒவ்வொரு சங்கமும், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் உரியமுறையில் கணக்காய்வு செய்யப்பட்ட சங்கத்தின் இறுதி நிதியறிக்கையைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை, கவனத்தின் கீழுள்ள ஆண்டுக்காகச் சங்கத்தின் செயல் நிறைவேற்று அறிக்கைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக, "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(அ) இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவரான தனியாள்; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமத்தின் வதிவுள்ள பங்காளிகளுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவுள்ளாரோ அந்தக் கணக்காளர் என்று பொருளாகும்.

## முதலாம் அட்டவணை

*(ஒழுங்குவிதி 3 (1))*

*படிவம் சி 01*

| **2003 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம்**<br>பதிப்புரிமை சார்புடைய<br>உரிமைகளும் பிணக்குத் தீர்வுக்கான விண்ணப்பமும் | அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்<br>கிடைக்கப்பெற்ற திகதி: |
|---|---|
| விண்ணப்பகாரர் | |
| பெயர்:- | |
| முகவரி:- | |
| தொலைபேசி மற்றும் தொலைநகல் பக்ஸ் இலக்கங்கள் அத்துடன் மின்னஞ்சல் முகவரி (இருப்பின்): | |
| எதிர்வாதி: | |
| பெயர்: | |
| முகவரி: | |
| தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்கள் அத்துடன் மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) : | |
| தீர்க்கப்படவேண்டிய பிணக்கின் விவரம்: (அவசியமாயின் மேலதிகத்தாள்களை இணைக்கவும்) | |
| கோரப்பட்ட நிவாரணம்: | |

மேற்கூறிய தகவல் உண்மையானதும் சரியானதும் என நான் தெரிவிப்பதுடன் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பிணக்கைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தோதான முடிவொன்றை எடுக்குமாறும் பணிப்பாளர் தலைமையதிபதியை கோருகிறேன். தேவைப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசிகள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

திகதி:----.

----.
கையொப்பம்

(ஒழுங்குவிதி 4 (2)

*படிவம் சி 02*

| ***2003 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம்***<br><br>***நாட்டுப் பாடல்***<br>*அங்கீகாரமளிப்பதற்கான விண்ணப்பம்* | *அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்*<br>*கிடைக்கப்பெற்ற திகதி:* .....................<br><br>*கிடைக்கப்பெற்ற*<br>*கட்டணம்:* ........................... |
|---|---|
| விண்ணப்பகாரர் | |
| பெயர்:- | |
| முகவரி:- | |
| தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் பக்ஸ் இலக்கங்கள் அத்துடன் மின்னஞ்சல் முகவரி (இருப்பின்): | |
| சம்பந்தப்பட்ட நாட்டுப்பாடலின் இனம் காணல் | |
| பிறப்பிக்கப்பட்ட இடம் தெரிந்தால்: | |
| நாட்டுப்பாடலை வைத்திருப்பவர்கள் தெரிந்திருந்தால்: | |
| அதிகாரமளிப்பு தேவைப்படும் நோக்கங்கள் : | |
| ஆக்கப்படவேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | |
| அரங்காட்டப்படவேண்டிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | |
| ஒலிபரப்பப்படவேண்டிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | |

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நாட்டுப்பாடலை இனங்காணக் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதனை நான் பொறுப்பேற்கின்றேன். பணிப்பாளர் தலைமையதிபதி விதிக்கக்கூடிய வேறு ஏதேனும் நிபந்தனைக்கும் நான் கட்டுப்படுவேன்.

திகதி:----.

----.
கையொப்பம்

(ஒழுங்குவிதி 5 (1)

படிவம் சி 03

| | |
|---|---|
| **2003 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம்**<br><br>*சங்கமொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பமும் அத்துடன் உரிமங்களை வழங்குவதற்கான அனுமதியும்* | *அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்*<br><br>*கிடைக்கப்பெற்ற திகதி: ................* |
| விண்ணப்பகாரர் | |
| பெயர்:- | |
| முகவரி:- | |
| தொலைபேசி இலக்கம் அத்துடன் தொலைநகல் இலக்கங்கள்:<br>மின்னஞ்சல்/முகவரி: | |
| உரிமைகளின் எந்தத் துறைக்கு/வகுப்பிற்குப் பதிவு கோரப்படுகின்றதோ அந்தத்துறை/வகுப்பு | |
| விண்ணப்பகாரரின் உயர்தொழில் சார்ந்த ஆற்றல் மற்றும் தகுதி தொடர்பான விவரங்கள் (அவசியப்படின் மேலதிகத்தாள் பத்திரங்களைச் சேர்க்கவும், | |

மேற்படி தகவல் உண்மையானதும் சரியானதும் ஆகும். 2003 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின்கீழ் சங்கத்தின் பதிவும் உரிமங்கள் வழங்குவதற்கான அனுமதியும் கோரப்படுகின்றன. யாப்பின்/புறவிதிகளினதும் அகவிதிகளினதும் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது.

திகதி:----. ----.
கையொப்பம்

**இரண்டாம் அட்டவணை**

கட்டணங்கள்

பதிப்புரிமையும் அது தொடர்பான உரிமைகளும்

1. பிரிவு 24(4) இன் கீழான அதிகாரமளித்தலுக்கான கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| மீள் உருவாக்கம் | 2% | | |
| அரங்கேற்றம் ஒவ்வொன்றும் | - | ரூபா | 500.00 |
| ஒலிபரப்பல் ஒவ்வொன்றும் | - | ரூபா | 500.00 |
| பொதுமக்களுடனான இதர தொடர்புகள் ஒவ்வொன்றும் | - | ரூபா | 500.00 |
| மொழிபெயர்ப்பு அல்லது தழுவல் | - | ரூபா | 500.00 |

11-33

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.